தினமணி

• திங்கள் • நவம்பர் 4 2019

# தேசிய தடகள போட்டி தங்கம் வென்ற தபிதா



தபிதா

சென்னை, நவ. 4–

தேசிய ஜூனியர் தடகள சாம்பியன் ஷிப் போட்டியில், நீளம் தாண்டுதலில், சென்னை வீராங்கனை தபிதா, தங்கப் பதக்கம் கைப்பற்றினார்.

ஆந்திர மாநிலம், குண்டூரில், தேசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி, நேற்று முன்தினம் துவங்கியது. இதில், ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் உள் ளிட்ட பல்வேறு வகையான தட கள போட்டிகள், நடந்து வரு கின்றன.

போட்டி யில், தமிழகம் சார்பில், 72 வீரர்கள், 76 வீராங்கனையர் என மொத்தம், 148 பேர் பங்கேற்றுள்ளனர். இதில், 16 வயதிற்கு உட்பட்ட பெண் கள் உயரம் தாண்டுதலில், தமிழக வீராங்கனை சந்தியா வெண்கலம் வென்றார்.

அதேபோல், 18 வயதிற்கு உட்பட்ட பெண்கள் நீளம் தாண்டுதலில், தமிழகத்தைச் சேர்ந்த தபிதா தங்கப் பதக்க மும், பபிஷா வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

மேலும், 20 வயதிற்கு உட்பட்ட ஆண்கள், 10 ஆயிரம் மீ., ஓட் டப்பந்தய போட்டி யில், தமிழக வீரர் சதீஷ், வெள்ளிப் பதக்கம் வென் றார். போட்டி கள் தொடர்ந்து நடந்து வரு கின்றன.

06|11|19